

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.5.2025) தலைமைச் செயலகத்தில், மனிதவள மேலாண்மைத் துறை சார்பில் நிர்வாக சீர்திருத்த முன்னெடுப்பின் மூலமாக "எளிமை ஆளுமை" திட்டத்தை தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு முதியோர் இல்லங்களுக்கான உரிமச் சான்றிதழ், பணிபுரியும் மகளிருக்கான தங்கும் விடுதிகள் உரிமச் சான்றிதழ், மகளிர் இல்லங்களுக்கான உரிமச் சான்றிதழ், வெள்ளை வகை தொழிற்சாலைகள் பட்டியல் விரிவாக்க சான்றிதழ் ஆகியவற்றை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, திருமதி. என். கயல்விழி செல்வராஜ், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாகு, முதன்மைச் செயலாளர் கோ. பிரகாஷ், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ முரளீதரன், PWC. டேவிதார், (ஓய்வு), தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவர் முனைவர் ஜெயந்தி முரளி, ஆகியோர் கலந்து கொண்டனர்.




கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தலைமையில் நேற்று (29.05.2025) தலைமைச் செயலகத்தில் கூட்டுறவுத்துறையின் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு(ம) நுகர்வோர் பாதுகாப்புத்துறை செயலாளர் சத்ய பிராத சாகு, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கே. நந்தகுமார், நுகர்வுப் பணிகள் எஸ்.பி.அம்ரித் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

### மூத்த பத்திரிகையாளர்

# ஏ.பி.மோகன் மறைவிற்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, மே 30-

மூத்த பத்திரிகையாளர் ஏ.பி.மோகன் மறைவிற்கு இரங்கல் தெரிவித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மறைந்த மோகன் குடும்பத்திற்கு ரூபாய் 10 லட்சம் நிதியுதவி வழங்கி உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து அவரது அறிவிப்பு வருமாறு:-

“மக்கள் குரல்” நாளிதழின் மூத்த செய்தியாளரும், சென்னை பத்திரிகையாளர் மன்ற உறுப்பினருமான ஏ.பி.மோகன் (வயது 66) அவர்கள் தனியார் மருத்துவமனைக்கு பரிசோதனைக்காக சென்றபோது எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட மாரடைப்பின் காரணமாக நேற்று (29.05.2025) சென்னையில் இயற்கை எய்தினார் என்ற செய்தி அறிந்து மிகவும் வருந்துகிறேன்.

ஏ.பி.மோகன் அவர்கள், “மக்கள் குரல்” பத்திரிகையில் செய்தியாளராக 40 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றியவர். அனைவரிடமும் நல்ல பண்புடனும், அன்புடனும் பழகும் இனிய பண்பாளர். இவரது பத்திரிகைத் துறையின் பணி அனைவராலும் பாராட்டுக்குரியது என்பதை நினைவு கூர்கிறேன்.

ஏ.பி.மோகன் அவர்களின் மறைவு பத்திரிகை உலகிற்கு மிகப்பெரிய இழப்பாகும். அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர், உறவினர்கள், பத்திரிகை உலக நண்பர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த மூத்த பத்திரிகையாளர் ஏ.பி.மோகன் அவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து பத்து இலட்சம் ரூபாய் வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### சென்னை தீவுத்திடலில் புதிதாக அமையவுள்ள

# ஒருங்கிணைந்த கூட்டுறவு வளாகத்திற்கான பூர்வாங்கப் பணிகள்!

## கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் துவக்கி வைத்தார்!

சென்னை, மே 30

கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் அவர்கள், நேற்று (29.05.2025) சென்னை, தீவுத்திடல், சத்தியவாணி முத்து நகரில் புதிதாக அமையவுள்ள ஒருங்கிணைந்த கூட்டுறவு வளாகத்திற்கான பூர்வாங்கப்பணியினை துவக்கி வைத்தார்.

முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, கூட்டுறவுத்துறையின் சார்பில் 49 அறிவிப்புகள் சட்டமன்றத்தில் கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில் பல்வேறு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதன்படி, சென்னை, தீவுத்திடல், சத்தியவாணி முத்து நகரில் 4 தளங்களுடன் 19,464 சதுர அடி பரப்பளவில் ரூ.8கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளாகம் கட்டப்படவுள்ளது.

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளாகத்தின் தரைத்தளத்தில் இப்பகுதி மக்களுக்காக சென்னை மத்திய கூட்டுறவு வங்கி கிளை, ஏ.டி.எம் மையம், சிறிய பல்பொருள் சிறப்பங்காடியும், முதல் தளத்தில் கூட்டுறவு நிறுவனங்களுக்கான அலுவலகங்களும், இரண்டாம் தளத்தில் சென்னை கூட்டுறவு மேலாண்மை நிலையத்திற்கான வகுப்பறைகள், மூன்றாம் தளத்தில் சென்னை கூட்டுறவு மேலாண்மை நிலையத்திற்கான நவீன வகுப்பறைகள் (Smart Class Room) மற்றும் தேர்வுக்கூடமும், நான்காவது தளத்தில் நவீன வசதிகளுடன் கூடிய கூட்டரங்கம் மற்றும் அவைக்களம் (Auditorium) ஆகியன அமையவுள்ளது.

இந்நிகழ்வின்போது, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் டாக்டர்.க.நந்த குமார், கூடுதல் பதிவாளர்/மேலாண்மை இயக்குநர் முனைவர்.க.சொ.இரவிச்சந்திரன் உட்பட பலர் உடனிருந்தனர்.

### தலைமை: பா. குணாளன் ! என்.சந்திரன் எம்.சி. – கோல்டு டி.பிரகாஷ் முன்னிலை – காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட

# மீனவர் அணி துணை அமைப்பாளர் ஏ.உதயகுமார் (எ) பிரபு திருமண வரவேற்பு விழா!

## டி.ஆர். பாலு எம்.பி. – ஆர்.எஸ். பாரதி – அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன் – மா. சுப்பிரமணியன் வாழ்த்துரை!



சென்னை, மே.30

கழகத் தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின், இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் நல்லாசியுடன், ஆலந்தூர் வடக்கு பகுதி கழக முன்னோடி மறைந்த ஏ.ஏகாம்பரம் அவர்களின் மகனும், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் ஏ.உதயகுமார் (எ) பிரபு - ஆலந்தூர் வடக்கு பகுதி தி.மு.க. வழக்கறிஞர் அணி வி.சுகன்யா (எ) செல்வி ஆகியோரின் திருமண வரவேற்பு விழா இன்று (30.5.2025 வெள்ளிக்கிழமை) மாலை 6 மணிக்கு பகுதி செயலாளர் பா. குணாளன் தலைமையில் நடைபெறுகிறது.

பகுதி செயலாளர் என். சந்திரன் எம்.சி., மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி .பிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். கே.பி. முரளி கிருஷ்ணன், எம். ஆர். சீனிவாசன், ஆர்.டி. பூபாலன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன், கழக பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., அமைச்சர் மா.சுப்பிரமணியன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

இதில் மீ.அ. வைத்தியலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். ஆர் ராஜா, இ. கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன், ப. தாயம் கவி, மற்றும் துணை மேயர் மு.மகேஷ் குமார், படப்பை ஆ மனோகரன், மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ. காமராஜ், மாநில மாணவரணி செயலாளர் இரா.ராஜீவ் காந்தி,

கலாநிதி குணாளன், இ.கார்த்திக், சையத் சுலைமான், ஆ.திபக், பி. செல்வகுமார், தி.மு. காமராஜ், கா. செந்தில் குமார், எஸ் வாசிம், சு. தீன தயாளன், பால அமுதநாதன், ஆர். அன்பு எழில், எஸ். விக்னேஷ், பால ஆனந்தன், தி.மு. செந்தமிழ், ரூபன் ஆபிரகாம், ஜெ. கிரன்புருஸ், கே.கே. சண்முகம், சே.விக்கி, ஆ. ஜாஹிர், ஏ. திலீப், எஸ். தரணிவேந்தன், ஏ. பிரபு,

எல்.இதயவர்மன், ஜி.கே. ரவி, ஏ.வந்தேமாதரம், வே. கருணநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, த.ஜெயக்கு மார், டி.பாபு, எஸ்.ஜபருல்லா, எம். கே.டி.கார்த்திக், வை.ம.அருள்தாசன், எம்.எஸ்.கே.இப்ராகிம், கீதா ஆனந்தன், இரா. பாஸ்கரன், எஸ்.சதீஷ், பேராசிரியர் பிரபு, கே.எத்திராஜ், சாய்ஜெய்காந்த் பாரதி, ஆர். கோவிந், ஆர்.ஆர்.ஜெய்ராம் மார்த்தாண்டன், கே.ஆர். ஆனந்தன், சாரதி பெரிய நாயகம், வே.டில்லிபாபு, கோ. கோட்டீஸ்வரன், எஸ்.ஜெயா, A1சையத் அபுதாகீர், ஜி.சுந்தர்ராஜன், ஆர்.பாபு, ஏ.சாலமோன், கே.ராஜேஸ்வரி, இ.ரமேஷ், ஜெ.செல்வேந்திரன், ம.கோ.கருணாநிதி, ப. கிருஷ்ணமூர்த்தி, ஏ.ஆர்.சரவணா, ஏ.வேலவன், டி. ஜேசுதாஸ், கே.ஆர்.ஜெகதீஸ்வரன், இ.உலகநாதன், ஜெ.நடராஜன் உள்ளிட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.

இரா.மாதவன், எஸ்.அலீம் பாய், க.இளமாறன், டபிள்யூ. ஜூலியன், கோ.பிரவீன்குமார், சைதை சி.கே. பாபு ஆகியோர் வரவேற்கின்றனர்.

### திருச்செந்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்

# குடமுழுக்கு முன்னேற்பாடு பணிகள்! அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆய்வு!

சென்னை, மே 30 -

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (29.05.2025) ஆணையர் அலுவலகத்தில் ஜூன்7 அன்று நடைபெறவுள்ள திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் குடமுழுக்கிற்கான முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வு செய்து, அறிவுரைகளை வழங்கினார்.

அறுபடை வீடுகளில் இரண்டாம் படைவீடாக திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் திகழ்கிறது. உலகப் புகழ்பெற்ற இத்திருக்கோயிலில் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருப்பணிகள் மற்றும் பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணிகளை முதலமைச்சர் அவர்கள் கடந்த 28.09.2022 அன்று தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார். அதில் உபயதாரரான HCL நிறுவனத்தின் வாமசுந்தரி இன்வெஸ்ட்மென்ட் பிரைவேட் லிமிடெட் மூலமாகவும், திருக்கோயில் நிதி மூலமாகவும் பணிகள் நடைபெற்று இறுதி கட்டத்தை எட்டியுள்ளன. இத்திருக்கோயிலுக்கு 07.06.2025 அன்று குடமுழுக்கு நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் இலட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதனையொட்டி இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் நடைபெற்ற முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் குடமுழுக்கு ஏற்பாடு பணிகள், வருகை தரும் பக்தர்களுக்கான வசதிகளை நிறைவாக ஏற்படுத்தி தருதல், தமிழ்க் கடவுள் முருக பெருமானின் பெருமைகளை விளக்கும் கண்காட்சி அமைத்தல், ஆன்மிகம் சார்ந்த இசை மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்துதல், வெளிநாடுகளிலிருந்து குடமுழுக்கில் பங்கேற்க உள்ள இறையன்பர்களுக்கு தேவையான வசதிகளை செய்து தருதல் போன்ற பொருண்மைகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

**அரசுக்கு பெருமை சேர்த்திட வேண்டும்!**

நிறைவாக மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் பேசுகையில், திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் குடமுழுக்கு தொடர்பாக அமைக்கப்படும் குழுக்களில் இடம்பெறும் அலுவலர்கள் மற்றும் பொறியாளர்கள் தங்களது பணிகளை ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டுமெனவும், பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் குடமுழுக்கு, அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு போன்ற முக்கிய நிகழ்வுகளை அனைவரும் பாராட்டும் வகையில் நடத்தியதை போன்று திருச்செந்தூர் திருக்கோயில் குடமுழுக்கையும் ஆன்மிகப் பெரியோர்கள் மற்றும் இறையன்பர்கள் மகிழ்ச்சியுறும் வகையிலும், அரசுக்கு பெருமை சேர்க்கும் வகையிலும் சிறப்பாக நடத்திட தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்றிட வேண்டுமெனவும் அறிவுரைகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு.பி.என். ஸ்ரீதர், ஆலோசனைக் குழு உறுப்பினர் திரு.சுகி சிவம், கூடுதல் ஆணையர்கள் டாக்டர் சி.பழனி, திருமதி ந.திருமகள், திருமதி சி. ஹரிப்ரியா, திருமதி மா. கவிதா, பொ.ஜெயராமன், தலைமைப் பொறியாளர் திரு.பொ.பெரியசாமி, இணை ஆணையர்கள், கண்காணிப்பு பொறியாளர்கள், மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வடகாடு த. நல்லதம்பி
### மே 30 (2014)



தமது இளம் வயதிலேயே திராவிட இயக்கக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு,நாடக மன்றம் ஒன்றினை தானே துவக்கி, அதில் தானும் நடித்து அப்பகுதி முழுவதும் திராவிடக் கொள்கைகளை பரப்பினார். கழகம் துவங்கிய பின்னர் அதில் இணைந்து பணியாற்றினார்.

அண்ணா அவர்களால் துவக்கப்பட்ட சீரணி இயக்கத்தில் ஆலங்குடி பகுதி தலைவர் – திருவரங்குளம் ஒன்றியச் செயலாளர் – பொதுக்குழு உறுப்பினர் – மாவட்ட விவசாய அணிச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.

புதுக்கோட்டை நிலவள வங்கி தலைவராகவும், இயக்குநராகவும் – மாவட்ட அரசு மருத்துவமனை ஆலோசனை உறுப்பினராக பதவி வகித்தவர்.

1962 விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம் – 1964 இந்தி எதிர்ப்பு சட்ட எரிப்பு போராட்டம் – இலங்கை தமிழர் ஆதரவு போராட்டம் – 1986 சட்டநகல் எரிப்பு போராட்டம் ஆகிய போராட்டங்களில் பங்கேற்று சிறைத் தண்டனை பெற்றதோடு நெருக்கடி நிலை மிசா கைதியாக சிறையில் இருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**


**21-ம் ஆண்டு நினைவு அஞ்சலி**



திருமதி. **கமலா அரங்கநாதன்**
நினைவு தினம் 16–05–2004

திரு. **மு. அரங்கநாதன்** Ex. M.L.A.
நினைவு தினம் 30–05–2004

என்றும் உங்கள் ஆசீர்வாதத்துடன்

**The Graphic Design Shop & Cuckoo Garden** Mahabalipuram
அலுவலக ஊழியர்கள்,
சென்னை – 14 Mob: +91 94440 74706


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நாகை அ. அம்பலவாணன்
### மே 30 (2020)



கழகம் துவக்கப்பட்ட 1949ஆம் ஆண்டே முத்தமிழறிஞர் கலைஞரை அழைத்து, நாகை, ஆழியூரில் பொதுக்கூட்டம் நடத்தியவர். 1961–ல் சிக்கலில் கிளைக் கழகத்தை இவர் உருவாக்கியபோது, பேரறிஞர் அண்ணா அவர்களே நேரடியாக கிளை அலுவலகம் வந்து, கிளை குறிப்பேட்டில் கையொப்பமிட்டு சென்றார்.

கீழத் தஞ்சை மாவட்டச் செயலாளர், நாகை மாவட்டச் செயலாளர் என பல்வேறு கழகப் பொறுப்புகளை வகித்து, அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் ஆகியோரது அன்பையும் நன்மதிப்பையும் பெற்றவர்.

தஞ்சை மாவட்ட வேளாண் விற்பனைக்குழு தலைவராக பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

2017ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைமைக் கழகத்தின் சார்பில் ‘பாவேந்தர் பாரதிதாசன் விருது’ வழங்கப்பட்டது.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**